Puducherry / Regional Bulletin / Tamil /18.10hrs / 21.03.2026 / Script

வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர் : நாராயணசாமி

தேதி : 21.03.2026 – சனிக்கிழமை          நேரம் : மாலை 6.10 மணி

-----------------------------------------------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஈரான் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கப்பல் வழித் தடங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலியலுக்கு இடையே சமச்சீரான அணுகு முறை அவசியம் என மத்திய அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் ஈகைத் திருநாளான ரமலான் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி, கடற்கரைச் சாலையில் 100 சதவிகித வாக்குப்பதிவு குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

*முர்மு (09)*

உத்தரபிரதேச மாநிலத்திற்கு 3 நாள் பயணமாக சென்றுள்ள குடியரசு தலைவர் திருமதி திரௌபதி முர்மு, 3ஆம் நாளான இன்று மதுரா மாவட்டத்திலுள்ள கோவர்தனிலுள்ள டாங்காட்டி கோவிலுக்குச் சென்று வழிபாடு நடத்தினார். தொடர்ந்து, பாரம்பரிய கோவர்தன பரிக்ரமாவையும் மேற்கொண்டார். நேற்று ராமகிருஷ்ணா மிஷன் சேவாஸ்ரமத்தின் புதிய புற்றுநோய் இயல் மருத்துவமனையையும் திறந்து வைத்தார். முன்னதாக, அயோத்தியிலுள்ள ராமஜென்ம பூமி கோவில், இஸ்கான் கோவில் மற்றும் பிருந்தாவனத்திலுள்ள பிரேம் மந்திர் உள்ளிட்ட கோவில்களில் வழிபாடு மேற்கொண்டார்.

*மோடி (12)*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஈரான் அதிபர் திரு. Masoud Pezeshkian-னுடன் தொலைபேசியில் பேசியதோடு ஈத் மற்றும் நவ்ரூஸ் வாழ்த்துக்களைத் தெரிவித்தார். இந்தப் பண்டிகை காலம் மேற்காசியாவில் அமைதி, ஸ்திரத் தன்மை மற்றும் செழிப்பைக் கொண்டு வரும் என இரு தலைவர்களும் நம்பிக்கை தெரிவித்தனர். இது குறித்து பிரதமர் திரு.நரேந்திர மோடி விடுத்துள்ள சமூக ஊடகப் பதிவில், பிராந்தியத்தின்

ஸ்திரத்தன்மைக்கு அச்சுறுத்தலாகவும், அப்பகுதியின் முக்கிய உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்களை கண்டிப்பதாக தெரிவித்த அவர், கப்பல் போக்குவரத்திற்கான சுதந்திரத்தை பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும், கப்பல் வழித்தடங்கள் திறந்தும், பாதுகாப்பாக இருப்பதை உறுதி செய்வதன் அவசியத்தையும் பிரதமர் மீண்டும் அந்தப் பதிவில் வலியுறுத்தினார்.

*ராஜ்நாத் சிங் (10 )*

உத்தரகாண்ட் மாநில அரசின் 4 ஆண்டு கால ஆட்சி நிறைவை முன்னிட்டு ஹல்துவானியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மத்திய பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் கலந்துகொண்டு உரையாற்றினார். உலகம் தற்போது ஒரு நெருக்கடியான காலக்கட்டத்தை கடந்து வருவதாகவும், மேற்காசியாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் தாக்குதல்கள் இந்தியாவிற்கு மட்டுமல்லாமல், ஒட்டுமொத்த உலகிற்கும் கவலைக்குரியதாக உள்ளது என அவர் தெரிவித்தார். இந்த இக்கட்டான காலகட்டத்தில், பிரதமர் திரு. நரேந்திர மோடியின் தலைமையின் கீழ் நம் நாடு பல்வேறு நெருக்கடியிலிருந்து பெருமளவில் பாதுகாக்கப்பட்டு வந்துள்ளதாக அவர் பெருமிதம் தெரிவித்தார்.

*பூபேந்தர் யாதவ் (11 )*

நாட்டின் வளர்ச்சிக்கு பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலியலுக்கு இடையே சமச்சீரான அணுகு முறையின் அவசியத்தை மத்திய சுற்றுச்சூழல், வனம் மற்றும் பருவநிலை மாற்றத் துறை அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் வலியுறுத்தியுள்ளார். உலக வன நாள் இன்று கடைபிடிக்கப்படுவதை ஒட்டி அவர் வெளியிட்டுள்ள செய்தியில் வளங்களுக்காக காடுகள் அழிக்கப்படுவதை தவிர்த்து வாழ்வின் ஆதாரமான காடுகளை பாதுகாத்து மேம்படுத்த வேண்டும் என கேட்டுக்கொண்டார். இந்நாளை முன்னிட்டு டெஹ்ராடூனில் இன்று நடைபெற்ற 2 நாள் தேசிய பயிலரங்கின் தொடக்க அமர்வில் உரையாற்றிய அவர், இந்த சமநிலையை அடைவதற்கு அறிவியல் அடிப்படையிலான அணுகுமுறை தேவை என்றார்.

*ட்ரம்ப் (11 )*

ஈரானுக்கு எதிரான அமெரிக்க ராணுவ நடவடிக்கையைக் குறைப்பது குறித்து பரிசீலித்து வருவதாக அமெரிக்க அதிபர் திரு.டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார். இருப்பினும், போர் நிறுத்தம் சார்ந்திருக்காது என சூசகமாக தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப்பதிவில், அமெரிக்கா தனது நோக்கத்தை

எட்டுவதில் கிட்டத்தட்ட நெருங்கிவிட்டதாகவும், தங்கள் தரப்பு போர் நிறுத்தத்தை நாடவில்லை எனவும் தெரிவித்துள்ளார். இதில் அமெரிக்கா வெற்றி பெற்றுள்ளதாக தாம் கருதுவதாகவும், ஈரானுடன் பேச்சுவார்த்தை நடத்த தயாராக இருப்பதாக கூறிய அவர், அவர்கள் பக்கம் அதை முன்னெடுக்க யாரும் இல்லை என்பதை நாம் கவனிக்க வேண்டும் என திரு. ட்ரம்ப் தனது பதிவில் பதிவிட்டுள்ளார்.

*நிலக்கரி (10)*

நாட்டின் எரிசக்தி பாதுகாப்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது. நிலையான திறன் சார்ந்த நடவடிக்கைகள் மூலம் தொடர்ந்து 2ஆவது ஆண்டாக நாட்டின் நிலக்கரி உற்பத்தி 1 பில்லியன் டன் என்ற இலக்கை எட்டியுள்ளது. இதன்மூலம் முக்கிய தொழிற்சாலைகளுக்கான தடையற்ற எரிபொருள் விநியோகம் மற்றும் சுயசார்பு உறுதி செய்யப்பட்டுள்ளதாக மத்திய நிலக்கரி அமைச்சகம் கூறியுள்ளது. 2047ஆம்ஆண்டில் வளர்ச்சியடைந்த இந்தியா என்ற குறிக்கோளுடன் உள்நாட்டு உற்பத்தி திறனை மேம்படுத்தி நீடித்த பொருளாதார வளர்ச்சிக்கான நடவடிக்கைகள் இதன் மூலம் சாத்தியமாகும் என எதிர்பார்க்கப்படுகிறது.

*புதுச்சேரி ரமலான் (06)*

ஈகை திருநாளாம் புனித ரமலான் பண்டிகை இஸ்லாமிய பெருமக்களால் இன்று உற்சாகத்துடன் கொண்டாடப்படுகிறது. இந்நாளையொட்டி குடியரசு தலைவர், குடியரசு துணைத் தலைவர், பிரதமர், உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து தெரிவித்துள்ளனர். புதுச்சேரியில் நடைபெற்ற ரமலான் பண்டிகை கொண்டாட்டங்கள் குறித்த கூடுதல் தகவல்கள்.

... வாய்ஸ் ...

*புதுச்சேரி ரமலான் - வாய்ஸ் (14)*

... வாய்ஸ் ...

ரமலான் பண்டிகையை முன்னிட்டு இன்று புதுச்சேரியில், சுல்தான்பேட்டை ஈத்கா பள்ளி வாசல் மைதானம் மற்றும் கடற்கரைச் சாலை காந்தி திடல் உள்ளிட்ட பகுதிகளில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட இஸ்லமியர்கள் சிறப்புத் தொழுகையில் ஈடுபட்டனர். ரமலான் மாதம் இறைவனை நெருங்கும் மாதமாகவும், சொர்க்கவாசல் திறக்கப்பட்டு, நன்மைகள் அதிகம் கிடைக்கும் மாதமாகவும் இஸ்லாமியர்கள் கருதுவதால் இம்மாதம் முக்கியத்துவம் பெறுகிறது. நன்மை, தீமைகளைப் பிரித்து தெரிவிக்கும் திருக்குரான் இந்த மாதத்தில் தான் உலகிற்கு இறைவனால்

வழங்கப்பட்டது. ஆகையால் இந்த மாதம் முழுவதும் இஸ்லாமியர்கள் பெரும்பாலானோர் நோன்பு மேற்கொண்டு, ரமலான் பண்டிகையைக் கொண்டாடுகின்றனர். ரமலான் பண்டிகையை முன்னிட்டு நடைபெற்ற சிறப்புத் தொழுகைகளில் புத்தாடைகள் அணிந்து, பெரியவர்கள், சிறிவர்கள் என அனைவரும் கலந்து கொண்டு ஒருவருக்கொருவர் கட்டித் தழுவி ரமலான் வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொண்டனர்.

*விழிப்புணர்வு - தேர்தல் (10)*

புதுச்சேரியில் 100 சதவிகித வாக்குப்பதிவு குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தும் நோக்கில் புதுச்சேரி மாவட்ட தேர்தல் அலுவலகம் சார்பில் கடற்கரைச் சாலையில் சைக்கிள் மற்றும் இருசக்கர வாகன பேரணி நடைபெற்றது. இந்தப் பேரணியை மாவட்ட தேர்தல் அதிகாரியும், மாவட்ட ஆட்சியருமான திரு. குலோத்துங்கன் கொடியசைத்து துவக்கி வைத்தார். நகரின் முக்கிய வீதிகள் வழியாக சென்ற இப்பேரணியின் போது அனைவரும் வாக்களிக்கக் கோரி விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியின் போது 100 சதவிகித வாக்குப்பதிவை வலியுறுத்தும் வகையில் கையெழுத்து இயக்கமும் நடைபெற்றது. இந்நிகழ்வின்போது தேர்தல் அலுவலர் சுஜித் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

*புதுச்சேரி வேட்புமனு (06)*

புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல் 2026 வருகின்ற ஏப்ரல் மாதம் 9ஆம் தேதி நடைபெறவுள்ளது. இத்தேர்தலுக்கான வேட்புமனுத் தாக்கல் கடந்த 16ஆம் தேதி துவங்கியது. பல்வேறு அரசியல் கட்சிகளைச் சேர்ந்த வேட்பாளர்கள் விறுவிறுப்பாக தேர்தல் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். புதுச்சேரியில் நடைபெற்ற வேட்புமனு தாக்கல் பற்றிய கூடுதல் விவரங்கள்.

… வாய்ஸ் …

*வேட்புமனு -வாய்ஸ் -1 (16)*

… வாய்ஸ் …

புதுச்சேரியில் வேட்பு மனு தாக்கல் தொடங்கிய முதல் இரண்டு நாட்களான 16 மற்றும் 17 தேதிகளில் யாரும் வேட்பு மனு தாக்கல் செய்யவில்லை. ஆனால் 18ஆம் தேதி 12 மனுக்களும், 19ஆம் தேதி 7 மனுக்களும் தாக்கல் செய்யப்பட்டன. இந்நிலையில் 20ஆம் தேதியான நேற்று மட்டும் ஒரே நாளில் என்.ஆர். காங்கிரஸ், பாஜக, காங்கிரஸ், திமுக, பாமக, விடுதலை சிறுத்தைகள் கட்சி, நாம் தமிழர் கட்சி மற்றும் சுயேட்சைகள் என 102 வேட்பாளர்கள் 115 மனுக்களை தாக்கல் செய்தனர். நேற்று என்.ஆர். காங்கிரஸ் சார்பில் முதலமைச்சர் திரு. ரங்கசாமி,

தட்டாஞ்சாவடி, மங்கலம் ஆகிய 2 தொகுதிகளிலும், பாஜக சார்பில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் மணவெளி தொகுதியிலும், உள்துறை அமைச்சர் திரு. நமசிவாயம் மண்ணாடிப்பட்டு தொகுதியிலும், சட்டமன்ற உறுப்பினர் திரு கல்யாண சுந்தரம் காலாப்பட்டு தொகுதியிலும் வேட்புமனுக்களைத் தாக்கல் செய்தனர். இதேபோல் திமுக சார்பில் வில்லியனூர் தொகுதியில் எதிர்க்கட்சித் தலைவர் திரு. சிவா, நெல்லித்தோப்பு தொகுதியில் ஓம்சக்தி சேகர், திரு. கார்த்திகேயன், உருளையன்பேட்டை தொகுதியில் திரு. கோபால்,

*வேட்புமனு - வாய்ஸ் (13 )*

காங்கிரஸ் கட்சி சார்பில் லாஸ்பேட்டை தொகுதியில் சட்டமன்ற உறுப்பினர் திரு. வைத்தியநாதன், காமராஜர் நகர் தொகுதியில் திரு.தேவதாஸ் ஆகியோரும் வேட்புமனு தாக்கல் செய்தனர். புதுச்சேரி காரைக்கால் மற்றும் ஏனாமில் 21ஆம் தேதியான இன்று ரம்ஜான் பண்டிகை கொண்டாடப்படுவதால் பொது விடுமுறை அறிவிக்கப்பட்டுள்ளது. நாளை ஞாயிற்றுக்கிழமை என்பதால் வேட்புமனு தாக்கல் செய்யமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதால் கடைசி நாளான 23ஆம் தேதி திங்கட்கிழமை வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யமுடியும். புதுச்சேரியிலுள்ள 30 சட்டமன்ற தொகுதிகளுக்கு கடந்த 5 நாட்களாக

வேட்புமனுக்கள் பெறப்பட்ட நிலையில், ராஜ்பவன் தொகுதியில் போட்டியிட இதுவரை ஒருவர் கூட வேட்புமனு தாக்கல் செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. மாஹேவில் இன்று வேலை நாள் என்பதால் அங்குள்ள தேர்தல் நடத்தும் அதிகாரி அலுவலகத்தில் மட்டும் வேட்பு மனுக்கள் பெறப்பட்டன.

*புதுச்சேரி பா□க (11)*

புதுச்சேரியில் தேசிய ஜனநாயகக் கூட்டணி உறுதி செய்யப்பட்ட நிலையில், இதில் இடம் பெற்றுள்ள என்.ஆர். காங்கிரசுக்கு 16 இடங்களும், பாஜகவிற்கு 10 இடங்களும், அஇஅதிமுக மற்றும் லட்சிய ஜனநாயக கட்சிகளுக்கு தலா 2 இடங்களும் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் பாஜகவிற்கு ஒதுக்கப்பட்டுள்ள 10 இடங்களுக்கு, முதல் கட்டமாக 9 இடங்களுக்கான வேட்பாளர்கள் பட்டியலை கட்சித் தலைமையகம் வெளியிட்டுள்ளது. இதில் மண்ணாடிப்பட்டுத் தொகுதியில் உள்துறை அமைச்சர் திரு. நமசிவாயம், ராஜ்பவன் தொகுதியில் மாநில தலைவர் திரு. வி.பி. ராமலிங்கம், முதலியார்பேட்டை தொகுதியில் அமைச்சர் திரு. ஜான்குமார், மணவெளி தொகுதியில் சட்டப்பேரவைத் தலைவர் திரு. செல்வம் உள்ளிட்டோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

*உலக நீர் தினம் (16)*

மத்திய ஜல்சக்தி அமைச்சகம், இம்மாதம் 23ஆம் தேதி புதுடெல்லியில் உலக நீர் தின மாநாடு-2026-ஐ நடத்தவுள்ளது. மத்திய ஜல்சக்தி அமைச்சர் திரு. சி.ஆர். பாட்டீல் இம்மாநாட்டைத் தொடக்கி வைத்து அரசு மற்றும் தொழில் துறையினரின் முக்கியப் பிரதிநிதிகளுடன் மாநாட்டின் தொடக்க அமர்வில் பங்கேற்கிறார். நீடித்த நீர் மேலாண்மைக்கான வழிகள் குறித்து ஆராய்வதற்கும், புதுமை மற்றும் ஒத்துழைப்புக்கான ஒரு தளமாக இம்மாநாடு அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது. நீருக்கான தொழில் என்ற கருப்பொருளுடன் தொடங்கப்படவுள்ள இம்மாநாட்டில் தொழில்துறை தலைவர்கள், கல்வியாளர்கள், ஸ்டார்ட்அப் நிறுவனங்கள், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் இளம் கண்டுபிடிப்பாளர்கள் கலந்து கொண்டு பல்வேறு கட்டமாக ஆலோசனை மேற்கொள்ள உள்ளனர். இந்நிகழ்வில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த 700க்கும் மேற்பட்ட பிரதிநிதிகள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. மார்ச் 22ஆம் தேதி உலக அளவில் கொண்டாடப்படும் உலக நீர் தினத்தை அனுசரிக்கும் வகையில் இம்மாநாடு ஏற்பாடு செய்யப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.

*மீண்டும் தலைப்புச் செய்திகள்*

பிரதமர் திரு. நரேந்திர மோடி இன்று ஈரான் அதிபரை தொலைபேசியில் தொடர்பு கொண்டு கப்பல் வழித் தடங்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வலியுறுத்தினார்.

நாட்டின் வளர்ச்சிக்கு பொருளாதாரம் மற்றும் சுற்றுச் சூழலியலுக்கு இடையே சமச்சீரான அணுகு முறை அவசியம் என மத்திய அமைச்சர் திரு.பூபேந்தர் யாதவ் தெரிவித்துள்ளார்.

புதுச்சேரியில் ஈகைத் திருநாளான ரமலான் பண்டிகை வழக்கமான உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

புதுச்சேரி, கடற்கரைச் சாலையில் 100 சதவிகித வாக்குப்பதிவு குறித்த இருசக்கர வாகன விழிப்புணர்வு பேரணி நடைபெற்றது.

இத்துடன் இந்த செய்தி அறிக்கை நிறைவு பெறுகிறது MS/CN/VM